# Sanga Kala Penpar Pulavargalin Manithaneyam

**Dr. M. Mahalakshmi**
*Associated Professor, Department of Tamil*
*Thiruthangal Nadar College, Chennai*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18358617

**Abstract**
*The Humanity of Sangam Feminist Study Summary Feminist poets in Sanga period Tamil literature have expressed humanist ideas with social purpose. This study examines the humanist ideas of poets like Auvaiyar, Kakaipadiniyar, Nachellaiyar etc. based on their songs. Humanity is defined in this study as including elements such as love, compassion, equality, value of life and social responsibility. Feminist poets in Sanga period Tamil literature have expressed humanist ideas with social purpose. This study examines the humanist ideas of poets like Auvaiyar, Kakaipadiniyar, Nachellaiyar etc. Based on their songs. Humanity is defined in this study as including elements such as love, compassion, equality, value of life and social responsibility. In the songs of female poets, human emotions are revealed focusing on life situations such as war, fly, love, etc. When they sing about war, the tragedy of loss of life is highlighted over heroism. It emphasizes the value of human life. Auwaiyar's songs advocate social equality and benevolence as hallmarks of humanity. He asserts that wealth and power are impermanent, while virtue and love are permanent. This study reveals not only the personal sentiments of Sangam women poets but also the overall humanistic thought of the society. This study reveals not only the personal sentiments of Sangam women poets but also the overall humanistic thought of the society*

***Keywords :*** *Puram - Purananooru, Agam- aga naan oru, Thol - tholkappiyam, Kuru - kurunthogai*

**References**

1. Pe su. mani, Sanga kala avvaiyarum ulakap penpar pulavargalum
2. Ma po sivagnanam, Avvaiyar
3. Munaivar mu anbuselvi, Sanga ilaky pengalin manithaneya

# சங்ககாலப் பெண்பாற் புலவரின் மனிதநேயம்

***முனைவர் ம. மகாலெட்சுமி***
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
திருத்தங்கல் நாடார் கல்லூரி, சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***
*சங்க காலத் தமிழ் இலக்கியங்களில் பெண்பாற் புலவர்கள் மனிதநேயக் கருத்துகளை சமுதாய நோக்கத்துடன் வெளிப்படுத்தியுள்ளனர். இந்த ஆய்வு, ஔவையார், காக்கைப்பாடினியார், நச்செள்ளையார் போன்ற பெண்பாற் புலவர்களின் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு, அவர்களது மனிதநேயச் சிந்தனைகளை ஆய்வு செய்கிறது. மனிதநேயம் என்பது அன்பு, கருணை, சமத்துவம், உயிர் மதிப்பு, சமூக பொறுப்பு போன்ற கூறுகளை உள்ளடக்கியதாக இவ்வாய்வில் வரையறுக்கப்படுகிறது. பெண்பாற் புலவர்களின் பாடல்களில் போர், ஈகை,காதல், போன்ற வாழ்வியல் சூழல்கள் மையமாகக் கொண்டு மனித உணர்வுகள் வெளிப்படுகின்றன. போர் குறித்து அவர்கள் பாடும்போது வீரத்தை விட உயிரிழப்பால் ஏற்படும் துயரம் முன்னிலைப்படுத்தப்படுகிறது. இதன் மூலம் மனித உயிரின் மதிப்பு வலியுறுத்தப்படுகிறது. ஔவையாரின் பாடல்கள் சமூகச் சமத்துவம் மற்றும் கருணையை உதவும் மனப்பான்மை மனிதநேயத்தின் அடையாளம் எனக் கூறுகிறார். செல்வம், அதிகாரம் நிலையற்றவை என்றும், அறமும் அன்பும் நிலையானவை என்றும் வலியுறுத்துகிறார். இந்த ஆய்வு, சங்ககால பெண்பாற் புலவர்கள் தனிப்பட்ட உணர்வுகளை மட்டுமல்லாமல், சமூகத்தின் ஒட்டுமொத்த மனிதநேயச் சிந்தனையையும் வெளிப்படுத்துகிறது.*

- *பெ.சு. மணி – சங்க கால அவ்வையாரும் உலகப் பெண்பாற் புலவர்களும்*
- *ம. பொ. சிவஞானம் – ஔவையார்*
- *முனைவர் மு அன்புச்செல்வி – சங்க இலக்கியப் பெண்களின் மனிதநேயம்.*

***சுருக்கக் குறியீடு:*** *புறம் – புறநானூறு, அகம்– அகநானூறு, ப– பக்கம்*

தமிழ் சமுதாயத்தின் நிலையை அறிய அனைத்து வகையிலும் உதவுவன சங்க இலக்கியங்கள் இவை அகம் புறம் என்ற இரு திரத்திலும் அக்கால சமுதாயத்தின் மனிதநேயத்தை காட்டுகின்றன. சங்க கால சமுதாயம் தனி மனித நலனை மட்டுமன்றிச் சமுதாய நலனையும் எண்ணுவதாகவே திகழ்கிறது. மனிதன் மனிதனாக வாழவும் சமுதாயமும் நாடும் வளம் பெறவும் தன்னலம் மறைந்து பொதுநலம் மேலோங்க, மனிதர்களிடம் அன்பு, கருணை, இறக்கம் உதவி செய்யும் மனப்பான்மை ஆகியவற்றைக் குறிக்கும் ஒரு பண்புதான் மனிதநேய பண்பாகும். இப் பண்பு நிலையினை சங்ககாலப் பெண் புலவர்கள் தங்கள் பாடங்களில் எங்கனம் வெளிப்படுத்தி உள்ளார் என்பதை இக்கட்டுரையில் காணலாம். மனிதநேயம் என்பது மனிதனுக்கு மனிதன் அன்பு செலுத்துவதாகும். ஒரு மனிதனை மனிதனாக வாழ செய்வதற்கான அடிப்படை ஆதாரமாக திகழ்வது அன்பு எவ்வித தடையும் இன்றி காட்டப்படுவதே மிகச்சிறந்த மனித நேயமாகும். உலகம் உவப்புடன் வாழ அன்பே அடிப்படை அன்புடையாரே பிறருக்கும் இன்பத்தை உண்டாக்கி தாமும் இன்பம் உடையவராக வாழ்வதற்குரியவர் என்று குறிப்பிடுவர். இவ் அன்பு உள்நோக்கம் அற்றதாக இணக்கம் காட்டுவதாக அமைதல் வேண்டும். இவ் அடிப்படை புரிதலால் மனிதநேயம் பிறக்கிறது.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் சில கடமைகள் உண்டு அதில் சமுதாயக் கடமை ஒன்று அதிலும் பிறர் நலம் பேணல் தலையாயக் கடமை என்பதனை இளங்கோவடிகள் சிலப்பதிகார காப்பியத்தில் காண முடிகிறது.

**அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**

என்று கண்ணகியின் கூற்று வாயிலாக இளங்கோவடிகள் புலப்படுத்துகிறார்.

**தொல்காப்பியர் காட்டும் மனிதநேயம்**

தமிழ் மொழியைப் பொறுத்தவரை அனைத்திற்கும் இலக்கணம் வகுத்துவராக கருதப்படுபவர் தொல்காப்பியர் இவர் மனித நேயம் பற்றிக் கூறுவது உலகில் இன்பம் நிலவுவதற்கு அடிப்படை காரணம் அன்பு இன்பம் என்பது அவரவர் மனதை பொறுத்து அமைகிறது. இதனைத் தொல்காப்பியர்

**எல்லா உயிர்களுக்கும் இன்பம் என்பது**
**தான் அமர்ந்து வருஉம் மேவற் றாகும்**
***(தொல். பொருள். 216)***

என்ற நூற்பாவில் கூறுகிறார்.

எனவே மனிதன் தன் நலன் மட்டுமல்லாது பிறருடைய நலனையும் நாட வேண்டியவன் ஆகிறான் என்பது புலனாகிறது.

**ஔவையார்**

ஔவையார் மனித நேயத்தை அறநெறியாக மட்டுமல்ல வாழ்வியல் நடைமுறையாகவும் வலியுறுத்துகிறார். இவர் அதியமான் சார்பாக தொண்டைமானிடம் அரசியல் தூது சென்றது போற்றுதற்கு உரியதாகும்.

**காற்று படுகனை எரி போல**
**தோன்றவும் வல்லம் புறம் *35***

என்பன போல பல்வகையால் அதியனின் வீரத்தை புகழ்ந்து பாடியவர் ஔவையார் அப்படிப்பட்ட வீரனுக்காக பகைவன் இடத்தை போர் நிறுத்தத்துக்காக தூது சென்றார் ஔவை. அதியனின் படை கருவிகள் கொல்லன் உலை களத்தில் கிடக்கும் நிலையில் போர் பெரும் சேதம் விளைவிக்கும் என்ற அஞ்சி போறை தடுக்க தூது சென்றிருக்கிறார் போரில் மனித குல அழிவு ஏற்படல் தவிர்க்க முடியாத ஒன்று அழிவிலிருந்து மக்களைக் காக்க ஔவை தூது நிகழ்ந்தது எனக் கருதலாம். இச்சூழல் அவர்களிடம் உள்ள "மனிதநேயம் வெளிப்படுவதை உணர முடிகிறது. படபுலத்து பேரரசன் அசோகன் கலிங்கத்து போரில் புத்த பேதம் பெற்று புத்ததர்மத்தின் பெண்பார் தூதுவராக சங்கமித்திரையை பாரதத்திற்கு வெளியே அனுப்பியதை பெருமையோடு கூர்ந்து இன்புற தக்கதற்கு ஒப்பாகும் என குறிப்பிடுகிறார்" மேலும் இதனை ஔவைக்கு நிகரான ஒரு பெண்பார்கவி உலக நாடுகளிலும் தோன்றியது இல்லை என்பதற்கு அம்மூதாட்டியாரின் தொண்டைமான் இடம் சென்ற தூது வெற்றி பெற்ற ஒன்றே போது மானதாகும் என்று மா.. போ சிவஞானம் இத்துது பற்றி கூறுகிறார்.

உள்நோக்கம் இன்றி பிறருக்கு பொருள் வழங்குவோரை சிறப்புக்கு பாடி ஈகை நயத்தை வளர்த்ததை ஔவை பாடலில் காண முடிகிறது.

ஒவ்வாது ஈயும் மாரி வண்கை குறு. [13]

என அஞ்சியை பற்றி குறிப்பிடுவதால் இதனை அறியலாம்

**நன்னாகையார்**

விருந்தோம்பல் சங்ககாலத்தில் சிறந்த பண்பாகும் இப்பண்பு இரவில் கதவடைக்கும் முன் விருந்தினர் எவரேனும் உலரோ என கூவி அழைக்கும் அளவிற்கு சிறந்து இருந்ததை

**பலர் புகு வாயில் அடைப்பக் கடவுநர்**
**வருவீர் உளரோ - குறு *118***

என்று குறுந்தொகை பாடலில் விளக்குகிறார். இதனை வள்ளுவர்

**இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பல்**
**விருந்தோம்பி வேளாண் செய்து**

என்று விருந்தோம்பல் இல் வாழ்வின் முதன்மை கடமையாக கூறப்படுகிறது. மனிதர்களிடையே அன்பு பாசம் ஒற்றுமை ஆகியவற்றை வளர்க்கிறது தனிப்பட்ட மகிழ்ச்சியை விட முன்னிலைப்படுத்தும் மனப்பாங்கையும் உருவாக்குகிறது. இன்றைய காலத்திலும் விருந்தோம்பல் பண்பு சமூக நல்லிணக்கத்திற்கும் மனிதநேயத்திற்கும் அடித்தளமாக விளங்குகிறது.

**பொன்முடியார்**

குழந்தை பருவத்தில் பாலுண்ண மறுத்து அன்னையின் கோளுக்கு அஞ்சி உணவு உண்ணும் இயல்பு உடையவன் போர்க்களத் தில் புண்பட்டு கிடந்ததை கண்ட தாய் வியந்து பாடுவதாக

**பால் கொண்டு மடுப்பவும் உண்ணான் அகலின்**
**செறா அது ஓச்சிய சிறுகோல் அஞ்சியொடு**
**புறம் 3:10**

எனும் பாடல் தாய்நாட்டு வெற்றிக்காக தன் உயிர்நீத்த நேயத்தை விளக்குகிறது. இதுபோன்று இன்றளவும் தாய் நாட்டிற்காக உயிர் நீத்த வீரர்களை நாம் காண முடிகிறது.

**முள்ளி பூதியார்**

இல்லறத்தாரின் கடமைகள் அறம் புரிதலும் எல்லோருக்கு இல்லை என்று கூறாது கொடுத்தூ சுற்றம் பேனுவது என சங்க கால மக்கள் கருதினர். இதனால் பொருள் தேடலை அவர்கள் விரும்பினர் என்பதை சங்க இலக்கியங்கள் வழி அறிகிறோம். இதனை,

**அறந்தலைப் பிரியாது ஒழுகலும் சிறந்த**
**கேளிர் கேடு பல ஊன்றலும் நாளும் அகம் 173 :1-4**

என நன்னனது சிறப்பை பாடல் கூறுகிறது இல்லற கடனாற்றம் பொருட்டு பிரிந்து சென்ற தலைவனின் பிரிவு தலைவிக்கும் ஏற்புடையதாதல் வேண்டும் என தோழி கூறுவதால் தலைவியின் நல்வாழ்வில் அவள் கொண்ட அக்கறை மனிதநேயத்தை புலப்படுத்துகிறது.

**தாயங்கண்ணியார்**

ஈகை என்பது செல்வம் கொண்டவர்களுக்கு உரியது அல்ல பிறரின் துன்பத்தை தீர்க்கும் நோக்கில் செயல்படும் எந்த உதவியும் ஈகையாகும் ஈதல் இகழாமை இன்றேல் அறநிலை என்ற வள்ளுவர் கூறுவதன் மூலம் ஈகை இல்லையெனில் அறம் முழுமை பெறாது என்பதை குறிப்பிட்டுள்ளார்.

தாபத நிலையில் இவர் ஏற்றிய பாடலில் கணவனுடன் இல்லறத்தில் வாழ்ந்த காலத்தில் விருந்து பேணியதை கைமை நோன்பு இருக்கும் காலத்தில் தலைவி எண்ணிப் பார்ப்பதாக அமைகிறது இதில் தலைவன் வாழ்ந்த காலத்தில்

**குய்குரல் மலிந்த கொழுந்துவை அடிசில்**
**இரவலர்ந் தடுத்த வாயிற் புரவலர்,**
**புறம் 250:1-3**

இரவு நேரத்தில் செல்ல விடாமல் அவனது இல்லத்து விருந்து தடுத்தது என கூறுவது தலைவருடன் ஈகை சிறப்பை கூறுவதாகும்.

**காக்கைப் பாடினியார்**

பாடினியார் சங்ககாலத்தில் போரின் கொடுமைகளையும் மனித உயிரின் மதிப்புகளையும் தன் பாடல் மூலம் உணர்த்தியவர்

போர்க்களத்தில் உயிரிழந்த வீரர்களைக் கண்டு மனிதர்கள் மட்டுமல்லாது காக்கைகளும் அழும் நிலையை கூறியவர் இது மனித இழப்பு எவ்வளவு கொடுமையானது என்பதை உணர்த்துகிறது.

**மடங்குதல் கண்ட காக்கை கதுமென பாடும்**
**பெருந்தினை மறைந்தின் அருந்திரல் வீரர்**

இப்பாடல் மூலம் போர் வீரத்தை போற்றுவதற்கு பதிலாக போரால் ஏற்படும் உயிரிழப்பின் துயரத்தை அவர் முன் வைக்கிறார். உயிரின் மதிப்பு உயர்ந்தது என்று மனிதநேயம் மாண்பு வெளிப்படுத்துகிறது.

மேலும், குறுந்தொகை பாடலில்

**நள்ளி கானத்து அண்டர்**
**பல்ஆ பயந்த நெய்யின் தொண்டி**
**முழுதுடன் விளைந்த வெண்ணல் வெஞ்சோறு**
**குறு 210:1-/4**

என மகளிர்க்கே உரிய விருந்து உபசரிப்பில் சிறப்பிக்கப்படினும் நல்லியை பற்றியும் தொண்டியை பற்றியும் குறிப்பிட்டு தம் நாட்டுப்பற்றை வெளிப்படுத்துகிறார்.

**மாறாகத்து நற்பசுலையார்**

**சோழன்குலமுற்றதுதுஞ்சியகிள்ளிவளவனை பற்றி பாடும் பொழுது**

**புல்லுரு புண் கண் திருத்தோன் வெள்வேல்**
**சினங்கெழு தானை செம்பியன் மருக**
**புறம் 37**

என்றும்,

**புறவின் அல்லல் சொல்லிய கறையடி**
**யானை வன்மரும் வெறுத்த வெண்கடைக்**
**புறம் 37**

என்று அவனது முன்னோர்கள் அஃறினை உயிராகிய புறாவின் மீது கொண்ட நேயத்தை சுட்டிக் காட்டுகிறார் மேலும் இம்மன்னனைப் பற்றி கையறுநிலைப் பாடலில் இம் மன்னனது வீரத்தையும் அருஞ் சிறப்பையும் காட்டுகிறது.

**நக்கண்ணையார்**

குலத்திற்கு கரை போல பெண்ணின் நிறைக்கு காப்பு ஞானம் ஆகும் அதை சிதையாமல் காப்பது தாயின் கடமையாகும் என்பதனை

**பெருங்குளம் காவலன் போல**
**வருங்கடி அன்னையும்து யின் மறந்தனறே**
**புறம் -3**

என்ற பாடலில் கூறுகிறார். மகளின் மீது அன்பு கொண்ட அன்னை தன் துயில் மறந்து இருப்பதை பார்க்க முடிகிறது.

**பேய் மகள் இளவெயினி**

பெருங்கடங்கோன் புலவர் பாடுதற்கு உரிய வெற்றி வேந்தன். இவன் பகை அரசனின் அரன்களை அழித்து புறக்கொடை பெற்று சிறந்தவன் இவனது வீரத்தை பாடி நீ பல களஞ்சால் செய்யப்பட்ட பொன் அணிக லன்களை பரிசாக அவனிடமிருந்து பெற்றாள். அவளுக்கு இணைய தாளமிட்ட பாணன் பொன்னால் செய்து வெள்ளி நாரால் தடுக்கப்பட்ட பொற்றாமரைகளை பரிசாக பெற்றான் என்பதனை

**மரம் பாடிய பாடினி யும்மே**
**ஏர்உடைய விழு கழஞ்சியன் புறம் 11**

இதனால் அவரின் கொடைச்சிறப்பு பேசப்படுகிறது. மறம் பாடிய என்றதனால் தாய் நாட்டுப் பற்று மிக்க மன்னனின் வீரம் பேசப்படுகிறது.

**ஒக்கூர் மாசாத்தியார்**
**புறநானூற்றில் அமைந்த இவரது**
**“கெகடுக சிந்தை கடிது இவள் துணிவே”**
**புறம் 279**

பண்டை தமிழ் தாயகத்தின் நாட்டு நேயத்தை வெளிப்படுத்துவதாகவும் புறநானூற்றில் ஒரு மறக்குடி மகளின் வீரச்செயல் இவரால் பாராட்டப் பெற்றிருப்பதை இவரின் மனிதநேயத்தை வெளிப்படுத்துகிறது

அக வாழ்க்கை புற வாழ்க்கை காதல் களவு கற்பு முதலிய வாழ்க்கை நெறிமுறைகளிலும் இந்த மனிதநேய உணர்ச்சி சுட்டப்பட்டுள்ளது சமுதாய உறவுகள் இயல்பினால் பிணையப்பட்டிருக்கின்றன. பொது வாழ்க்கையை செம்மையாக்கி பண்பு நிறைந்த சமுதாயமாக மாற்றிட உணர்ச்சி பெரிதும் பயன்படுகிறது தனிப்பட்ட வாழ்க்கையில் ஆண்களும் பெண்களும் மனிதநேயமிக்க கூடியவர்களாக இலக்கியங்கள் எடுத்துக்காட்டப் பட்டிருக்கின்றன. மனிதநேயம் அன்பு கலந்த பண்பாகும் சமுதாய தளத்தில் எப்பகுதியிலும் மனிதநேயம் அவசியம் என்பதை ஒவ்வொரு மனிதரும் உணர்ந்தால் சமூகம் சிறப்பாக அமையும். மனிதன் மனிதனிடத்தில் காட்டும் நேயம் மட்டுமன்றி பிற உயிர்களிடத்திலும் மனிதன் கொண்டுள்ள இரக்க உணர்ச்சி, மதிப்பு, மனித நேயம் ஆகியவை சங்ககால பெண்பாற் புலவர்களின் பாடல்கள் இன்றைய சமுதாயத்தின் வழிகாட்டியாக விளங்குகின்றன.


1. பெ.சு. மணி - சங்க கால அவ்வையாரும் உலகப் பெண்பாற் புலவர்களும்
2. ம. பொ. சிவஞானம் - ஔவையார்
3. முனைவர் மு அன்புச்செல்வி - சங்க இலக்கியப் பெண்களின் மனிதநேயம.


**சுருக்கக் குறியீடு**

- புறம் - புறநானூறு
- அகம்- அகநானூறு
- குறு - குறுந்தொகை
- தொல் - தொல்காப்பியம்
- ப- பக்கம்